[10th February 1959

பாஸ் செய்து அனுப்பவேண்டும் என்று ஏதாவது நிபந்தனை தெரிவிக்கப் பட்டதா ? ஏப்ரல் முதல் தேதிக்குள்ளாக இதெல்லாம் சரிசெய்யப்பட்டு இது அமுலுக்கு வரவேண்டுமென்ற யோசனையும் சொல்லப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஏப்ரல் முதல் தேதிக்குள் அமுலுக்கு வரவேண்டுமென்றுதான் இந்த ராஜ்ய சர்க்காரும் சொல்லி யிருக்கிறார்கள். பிப்ரவரி 15-ஆம் தேதிக்குள் இங்கு கொண்டு வரமுடியு மானால் சௌகரியமாக இருக்கும் என்று இந்த அரசாங்கம் தெரிவித்திருக் கிறது. ஆனால் மசோதா இன்னும் வந்து சேரவில்லை.

SRI K. VINAYAKAM : கூடிய சீக்கிரம் அந்த மசோதா நமக்கு வரும்படி செய்வதற்கு நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு மறு படியும் எழுதி, தகவல் கேட்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுபற்றி அவர்களுக்கு அவ்வப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறோம். கூடிய சீக்கிரம் அவர்களும் பரிசீலனை செய்து அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

Seed farms

* 180 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the area of seed farms in Tirunelveli district and Kanyakumari district;

(*b*) the extent of wet and dry lands; and

(*c*) the lease amount paid per acre of dry lands and wet lands in the different seed farms of these districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(*a*) (1) Tirunelveli district—164.83 acres.

(2) Kanyakumari district—32.00 acres.

(*b*) & (*c*) The entire extents in the two districts are wet lands.

The lease amounts paid are as below :—

Name of seed farm.	Lease amount per acre.
(1) Tirunelveli district—	
Karaiyiruppu farm	**600**
Vasudevanallur farm	**300**
Illangi farm	**300**
(2) Kanyakumari district—	
Thirupathisaram farm	**The lands are Government lands. The question of lease amount does not arise.**

10th February 1959]

Sri K. SATTANATHA KARAYALAR : திருநெல்வேலி வட்டாரத்திலுள்ள விதைப் பண்ணைகளில் எவை எவை லாபகரமாக வேலை செய்கின்றன. எந்தெந்த விதைப் பண்ணைகளை தொடர்ந்து நடத்துவதாக சர்க்காருக்கு உத்தேசம் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கரையிருப்பு பண்ணை குத்தகை அதிகமாக இருந்தாலும் லாபகரமாக வேலை செய்கிறது. அதனால் அதைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது என்று யோசனை. மற்ற இரண்டு விதைப் பண்ணைகளையும் விட்டுவிடுவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM : கரையிருப்பு விதைப் பண்ணைக்கு 600 ரூபாய் குத்தகை மாகாணத்தில் இருக்கும் குத்தகை விகிதத்தை விட அதிகமாகத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குத்தகை அதிகமாகத் தான் இருக்கிறது. அவ்வாறுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வளவு அதிக குத்தகை கொடுத்து மற்ற செலவுகளையும் சேர்த்து பார்த்தால் கூட 31—3—1958 வரை செலவு ரூ. 38,022. ரூ.41,000 வருவாய் வந்திருக்கிறது. மறுபடியும் 1—4—1958 முதல் 30—9—1958 வரையில் ரூ. 38,392 செலவு, வருவாய் ரூ. 41,552.

Srimathi T. N. ANANDANAYAKI : குத்தகை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுவதினால் அரசாங்க நிலங்களிலேயே இந்த விதைப் பண்ணைகளை நடத்துவது சாதகமாக இருக்குமா ? அதுபற்றி ஏதாவது புள்ளிவிவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரசாங்க விதைப்பண்ணை இருக்கிறது ஆராய்ச்சிக்கு. நல்ல நிலம் இருந்தால் அந்த நிலத்திலே பண்ணை வைக்கலாம் என்பதுதான் உத்தேசம். ஆனால், தகுந்த நிலம் போதிய அளவு அரசாங்கத்தின் கைவசம் இல்லை.

Sri G. GOMATHISANKARA DIKSHITAR : அம்பாசமுத்திரம் ஆராய்ச்சிப் பண்ணையில் விதைப் பண்ணை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்பாசமுத்திரம் ஆராய்ச்சி பண்ணையிலே ஆராய்ச்சி செய்வதற்கே போதிய நிலம் இல்லை. அதிக நிலம் வேண்டுமானால் விலை அதிகமாக சொல்லுவார்கள். அங்கே விதைப் பண்ணை வைப்பதற்கு நிலம் இருக்கும் என்று தோன்றவில்லை.

Sri K. SATTANATHA KARAYALAR : இளஞ்சி விதைப் பண்ணையில். தகுந்த காலத்தில் போதிய தண்ணீர் விடப்படாமல் இருந்ததா ? கோவிலைச் சேர்ந்த இதர நிலங்களுக்கு தண்ணீர் விடப்பட்டும், இதற்கு மாத்திரம் விடப்படாமல் இருந்ததா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தண்ணீர் கிடைக்காமல் இருந்தது ஒரு காரணம் தான். போதிய தண்ணீர் வசதி இருந்தும் போதிய அளவு தகுந்த காலத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. கோவில் அதிகாரிகள் இந்த நிலத்தை மறுபடியும் அவர்களுக்கு திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்று கேட்டார்கள். அவ்வாறு திருப்பி கொடுத்துவிடுவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

Sri T. S. RAMASWAMY PILLAI : கன்யாகுமரியிலுள்ள திருப்பதிசாரம் விதைப் பண்ணை சர்க்கார் பூமியில் நடத்தப்படுகிறது. அங்கே வருவாய் என்ன, செலவு என்ன ? அது லாபகரமாக நடக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 1958-ம் வருஷம் மார்ச் மாதம் 31ந்தேதி வரையில் இந்த விதைப் பண்ணையில் ரூ. 14,168 செலவு, ரூ.19,144 வருவாய். வாடகை ஒன்றுமில்லை. 1958-ம் வருஷம் எப்ரல்

மாதம் 1-ம் தேதி முதல் 1958-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந்தேதி வரையில் ரூ.10,311 செலவு, வருவாய் ரூ.10,076. அதற்கு மேல் 7,764 ரூபாயும் வந்திருக்கிறது.

* 181 *Q.*—Sri A. GOVINDASAMY : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரம் தாலூகா வீராணம் விதைப் பண்ணைக்கு எவ்வளவு நிலம் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

(ஆ) நஞ்சை எவ்வளவு ? புஞ்சை எவ்வளவு ?

(இ) குத்தகைத் தொகை தனித்தனியே எவ்வளவு ?

(ஈ) இந்த விதைப் பண்ணையில் எத்தனை கிணறுகள் இருக்கின்றன ?

(உ) இதுவரை எவ்வளவு செலவாகியுள்ளது ? வருமானம் எவ்வளவு ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 42.03 acres.

(*b*) Wet lands 25.31 acres.

Dry lands 16.72 acres.

(*c*) Rs. 225 per acre for wet lands.

Rs. 175 per acre for dry lands.

(*d*) Two wells.

(*e*) Rs. 8,806.69 has so far been spent on the farm and a sum of Rs. 4,76.00 has been derived as income from the farm.

Sri A. GOVINDASAMY : ஸார், இந்த பாரத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள புஞ்சை நிலத்திற்கு அதிகமான குத்தகை கொடுத்திருப்பதற்கு காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முதலில் போதிய அளவில் நிலம் வேண்டும் என்கின்ற அளவில் இந்த நிலங்களை எடுத்துக்கொண்டார்கள். இப்போது அவ்வளவு நிலங்கள் அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டு அதை திருப்பி கொடுத்துவிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இப்போது ஸ்டான்டிங் கிராப்பில் 6,400 ரூபாய்க்கு வருவாய் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

Sri C. NATARAJAN : அரசாங்கம் விதைப் பண்ணைகளை எடுத்துக்கொள்ளும்போது பெரிய மிராசுதார்களிடமிருந்து வாங்கி விதைப் பண்ணைகளை நடத்துகிறார்கள். இதற்கு அதிகமான குத்தகையும் கொடுக்க கலெக்டர் முன் வருகிறார்கள். கூடிய சீக்கிரமாகவே நிலங்களுக்கு ஸீலிங் வரப்போவதால் பெரிய மிராசுதார்கள் இம்மாதிரியான வழியில் அதிகமான பணத்தை சர்க்காரிடமிருந்து பெற்றுவருகிறார்கள். ஆகவே இம்மாதிரியான நிலங்களை எடுக்கக்கூடாது என்று இந்திய அரசாங்கத்தினிடமிருந்து ஏதாவது உத்தரவு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி விதைப் பண்ணைகளை நடத்தும்போது குறைந்தது ஐம்பது எக்கர்கள் தேவைப்படுகிறது. இவ்விதம் ஐம்பது எக்கர் நிலம் வாங்க வேண்டுமென்றால் அதை அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்துதான் வாங்க முடியும். இதிலும் குத்தகைக்கு வாங்குவதை விட விலைக்கு வாங்கிவிடுவது மிகவும் நல்லது என்றும் கருதப்படுகிறது. இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு உத்தரவும் வரவில்லை. இந்த அரசாங்கம் தான் இம்மாதிரியான நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை.